# இன்று அவர்கள் கண்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன். யோசு 3 :7

**கர்த்தர் நீதியை சரிகட்டுகிறவர். உக்கிர கோபமுள்ளவர்,**
**கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்கு பிரதி பலன் அளிக்கிறவர். நாகூ 1 :2**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரனே, சகோதரியே,

சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர் என்று தாவீது பாடுகிறார். தாவீதுடைய வாழ்க்கையில் பலவித நெருக்கங்கள் இருந்தது. அதில் ஒன்று சத்துருக்களினால் வரும் நெருக்கம். **சங்கீதம் 54 : 7 ல் 'அவர் எல்லா நெருக்கத்தையும் நீக்கி, என்னை விடுவித்தார். என் கண் என் சத்துருக்களின் நீதி சரிகட்டுதலைக் கண்டது'** என்றும், **சங்கீதம் 51 : 10ல்** தேவன் என் சத்துருக்களுக்கு வரும் நீதி சரிகட்டுதலை நான் காணும்படி செய்வார். என்று தாவீது சொல்லுகிறார். நீயும் இன்று அப்படி விசுவாசிப்பாயா ? உன் சத்துருக்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்தி உன்னை வாலாக்காமல் தலையாக்குவார். அல்லேலூயா!

உதாரணமாக தாவீதை சவுல் கொலை செய்ய வேண்டும் என்று இஸ்ரவேல் அனைத்திலும் 3000 பேரை கூட்டிக் கொண்டு போன போது வழியிலே ஒரு கெபிக்குள் மலஜலாதிக்குப் போனான். அந்த சமயம் தாவீதும் அவன் மனுஷரும் அந்த கெபியின் பக்கங்களில் உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது தாவீதின் மனுஷன் அவனை நோக்கி, **'இதோ நான் உன் சத்துருவை உன் கைகளில் ஒப்புக் கொடுப்பேன். உன் பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்வாயாக என்று கர்த்தர் அவனோடே சொன்ன நாள் இது தானே என்றார்கள் ?'** தாவீது எழுந்திருந்து போய் சவுலின் சால்வையின் தொங்கலை மட்டும் அறுத்துக் கொண்டான். கர்த்தர் அபிஷேகம் பண்ணின என் ஆண்டவன் மேல் என் கையைப் போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு கர்த்தர் என்னை காப்பாராக என்றான்.

மேலும் 1 சாமு. 24 : 11,12ல் அதில் கடைசியாக சொல்லும் வார்த்தை **'கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயம் விசாரித்து, கர்த்தர் தாமே என் காரியத்தில் உமக்கு நீதியை சரிக்கட்டுவாராக'**

உம்முடைய பேரில் நான் கை போடுவதில்லை. கர்த்தர் நியாதிபதியாக இருந்து எனக்கும் உமக்கும் நியாயந்தீர்த்து எனக்காக வழக்காடி, உம்முடைய கைக்கு என்னை விடுவிப்பாராக என்றான். அதற்கு சவுல் கர்த்தர் என்னை உன் கையில் ஒப்புக் கொடுத்தும் நீ என்னை கொன்று போடவில்லை. ஒருவன் தன் மாற்றானைக் கண்டுபிடித்தால் அவனை சுகமாகப் போகவிடுவானோ ? இன்று நீ எனக்கு செய்த நன்மைக்காக கர்த்தர் உனக்கு நன்மை செய்வாராக. நீ நிச்சயமாக ராஜாவாய் இருப்பாய் என்றும் இஸ்ரவேலின் ராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும் என்று அறிவேன் என்று கர்த்தர் சொல்கிறார். நாமும் நம்முடைய சத்துருக்களுக்கு தீமை செய்கிறவர்களுக்கு நன்மை செய்யும்போது உன்னையும் இன்று நிச்சயமாக மேன்மைப்படுத்துவார்.

அருமையானவர்களே,

இன்று உங்கள் சத்துரு யார் ? உன் வீட்டாரா ? அல்லது பக்கத்து வீட்டாரா ? ஏன் ? எதற்கு ? உன் பக்கம் நியாயம் உண்டா ? கர்த்தர் உன்னைப் பார்க்கிறார். இந்த உலகம் உன்னை நியாயம் தீர்க்க முடியாது. நம் தேவன் நீதிபரர் என்பதை மறந்து போகாதே. அவரை நோக்கிப் பார். தாவீது தேவனை நோக்கிப் பார்த்ததினால் தேவன் அவனுக்கு நீதி சரிகட்டினார்.

உங்கள் காரியம் எப்படியாகுமோ என்று மனம் பதறியிருக் கிறீர்களா ? **'நீங்கள் பயப்படாதிருங்கள். திடன் கொள்ளுங்கள், இதோ உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்'** என ஏசாயா 5 : 4 ல் சொல்கிறது.

அன்பான சகோதரனே, சகோதரியே,

**நீ உன் தேவனிடத்தில் திரும்பு.**

தயவையும், நியாயத்தையும் கைக்கொண்டு இடைவிடாமல் உன் தேவனை நம்பிக் கொண்டிரு. **ஓசியா 12 : 6.** கூறியது போல் தேவ பிள்ளையே நீயும் தேவனையே நம்பிக் கொண்டிரு. அவர் உன் காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

**இன்று அவர்களுடைய கண்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன்.** அல்லேலூயா!